Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஞு ஐப்பசி மீ உ 21 புதன்கிழமை (07 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 18 ஓசை 253

## மின்விளக்கு பாதுகாப்பு செஞ்சிலுவை கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் பொறுப்பேற்ற விடயம்பற்றி நேற்று அதன் யாழ். பிரதிநிதி ஜோர்ஜ் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கையில் ஒரு சமயத்தில் உள்ளூர் திருடர் விடயம் பற்றிகவலை தெரிவித்தார்.

ஏன்தெரியுமா? நாம். வைத்தியசாலை வலயத்தை குறிக்கும் வகையில் வலய (4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தாலே தொல்லை; புலிகளால் தொல்லை இல்லை

## கிளிநொச்சி அரச அதிபர் கடிதம்

(கிளிநொச்சி)

கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு கொண்டுவரும் எந்த ஒரு பொருளையும் விடுதலைப்புலிகள் வழியில் வைத்து மறித்து இடையூறுகள் செய்வதில்லை. ஆயுதப்படையினரும். ஆயுதக் குழுக்களும்தான் தடைமுகாம்களில் வைத்துச் சோதனை செய்வதென்ற பெயரில் இடையூறுகள் செய்கிறார்கள். இது எமக்குப் பெருமளவில் நஷ்டத்தை ஏற்படுத்துகின்றது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு சரித்தரத்வத்தைக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபரினால் எழுதப்பட்ட கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அக்கடிதத்தில் கொழும்பிலிருந்துகிளிநொச்சி மாவட்ட மக்களுக்கென அரசாங்கத்தால் அனுப்பப்படும் பொருள்கள் அனைத்தும் லொறிகள் மூலம் கிளிநொச்சிக்கு கொண்டுவரப்படுகிறது. சோதனை என்ற பெயரில் தடைமுகாம்கள் பலவற்றில் இப்பொருள்கள் இறக்கி ஏற்றப்படுகின்றன. இதனால் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகர்-ராஜீவ் இணைந்து செயற்பட முடிவு

வி. பி. சிங் அதிருப்தியாளரான சந்திரசேகரும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியும் நேற்று ஒரு மணி நேரம் சந்தித்துப்பேசிய பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில், இந்திரா காங்கிரசும் சந்திரசேகர் குழுவும் ஒன்றுபட்டு செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளார்கள். ஒத்துழைப்பின் உருவாக்கம் பற்றி ராஜீவ் காந்தி ஒன்றும் துலாம்பரமாகச் சொல்லவில்லை,

அதேவேளை சந்திரசேகர் அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் சந்திரசேகர் அரசாங்கத்தில் இந்திரா காங்கிரஸ் ஆதரவு பற்றியும் பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்குப் சூசமாகப் பதிலளிக்கையில், ''அது சரண்சிங்கின் மந்திரி சபை மாதிரி வெளியேறாது'' என்றும், ''ஏன் அரசாங்கம் நான்கு வருடங்கள் பதவியில் இருக்கக் கூடாது? என்றும் கேள்வி எழுப்பினார் ராஜீவ்.

சந்திரசேகர் குழுவை ஆதரிப்பதென ராஜீவ் காந்தியின் முடிவை இந்திரா காங்கிரஸ் (4ஆம் பக்கம் பார்க்க)

## ''செல்வா'' விற்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கீரிமலையில் இராணுவத்துடனான மோதலில் நேற்று முன்தினம் வீரமரணமடைந்த வீரவேங்கை செல்வம்(கெங்கா ஜெயகாந்) என்பவரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக நேற்றுமாலை மூன்று மணியளவில் திருநெல்வேலியிலுள்ள இந்து இளைஞர் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இந்தப் புகழுடலுக்குப் பெருந்திரளான மக்கள் அஞ்சலியைச் செலுத்தினர். இறுதியாகப் புகழுடல் கோப்பாயில் உள்ள மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (ச)

## ஊர்காவற்றுறைப் பகுதியில் புலிகள் - இராணுவம் மோதல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் நேற்றும் கரம்பன் பகுதியை நோக்கி முன்னேற முயன்றபோது தமிழீழ விடுதலைப்புலிகள் பலத்த எதிர்த் தாக்குதல்களை நடாத்தினார்கள். எதிர்த் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத இராணுவம் தனது முகாமிற்குப் பின்வாங்கியது. பின்னர் குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## டிசம்பர் 22 வரை பாடசாலைகள் தொடர்ந்து இயங்க வேண்டும்

### - கல்விப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் மூடப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டுள்ள பாடசாலைகள் யாவும் 22-12-90 வரை தொடர்ந்து இயங்க வேண்டும் என யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் இதனை அறிவித்துள்ளார்.

இந்தக் கால எல்லைக்குள் வரும் பொது விடுமுறைகளும், ஞாயிற்றுக்கிழமைகளும் தவிர்ந்த ஏனைய நாட்கள் யாவும் பாடசாலை நாட்களாகக் கருதப்படும்.

இந்த ஆண்டிற்கான 3ஆம் தவணை விடுமுறை 23-12-90 முதல்1-1-91வரையான காலப் பகுதியாகும். சகல பாடசாலைகளும் 2-1-91இல் மீண்டும் ஆரம்பமாகும்.

### பரீட்சைகள்

இந்த ஆண்டிற்கான வகுப் பேற்றப் பரீட்சைகள் யாவும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்குகளில் ஆசிரியர்கள் தவறாது சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் விடுபட்ட பாடசாலை நாட்களுக்குரிய பாடத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட 60 நாள் பாடத்திட்டத்தை அமுல்படுத்த வசதியாக நடைபெறவுள்ள சேவைக்கால கருத்தரங்குகளில் யாழ். மாவட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகத்தில் இரவு நேர விமானக் குண்டு வீச்சு

(மல்லாகம்)

மல்லாகம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலால் பதினொரு பேர் காயமடைந்தனர், இரு வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. பல வீடுகள் சிறு சேதத்திற்குள்ளாயின.

நேற்று முன்தினமிரவு 8-30 மணியளவில் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்தகுண்டு வீச்சு விமானங்கள் குளமன்கால் கிறிஸ்தவ தேவாலயம், மயானம் ஆகிய இடங்களை அண்டியுள்ள பகுதிகளில் தாக்குதலை மேற்கொண்டன. இந்த தாக்குதலால் சி. புஸ்பவதி (32) சி. பிரயதர்ஷினி (10) இ. நிஷாந்தன் (8) தே. தாட்சாயினி (7) (4 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ச்சியான பீரங்கித்தாக்குதல்

(வட்டுக்கோட்டை)

நேற்றுமுன் தினம் இரவு 9 மணியளவில் காரைநகர் பகுதியிலிருந்து சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று தொடர்ச்சியாகப் பீரங்கித் தாக்குதலை நடாத்தியது. இவை பொன்னாலை, காரைநகர், அராலித்துறை ஆகிய கடற்கரைப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (ச)

## மீனவர் அச்சம்

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிக் கடலில் காரைநகர் கடற்படை ரோந்து அதிகரிப்பால் மீனவர்கள் மீன் பிடிக்க செல்வதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர். மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் படகுகள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் சம்பவங்களும் அண்மைக் காலமாக அதிகரித்த வண்ணம் உள்ளது. நேற்று முன்தினம் குறிகட்டுவான் கடலில் மீன்பிடித்த மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஆனால் அவர்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. (15)

## வீர மரணம்

### சுஜி

(மாவிட்டபுரம்)

வீமன்காமப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று மத்தியானம் 11.45 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் சுஜி (பொன்னுத்துரை நாகஜீவன் பரப்புக்கடந்தான் மன்னார்) வீரமரணமடைந்தார். இவருக்கு புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### மதன்

(மாவிட்டபுரம்)

நேற்றுமாலை 3.45 மணியளவில் சிறிலங்கா படையுடன் மாவிட்டபுரம் பகுதியில் ஏற்பட்ட மோதலில் மதன் (ராஜப்பு அகஸ்டின் புலோப்பளை) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஒருபடை பலி ஒருபடை காயம்

(பலாலி)

பலாலி முகாம்மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஒரு இராணுவவீரர் கொல்லப்பட்டதாகவும் ஒரு படைவீரர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## குருநகர் இறங்குதுறையில் இன்றுபொருள்கள் இறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இன்று தொடக்கம் கப்பலில் வரும் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்கள் யாழ். நகரின் அருகே உள்ள குருநகர் இறங்கு துறையூடாக இறக்கப்பட உள்ளன.

யாழ். இறங்கு துறையிலிருந்து சுமார் இரண்டுமைல் தொலைவில் கப்பல் நிறுத்தப்பட்டு அதிலிருந்து தட்டுமனை ஒன்றின்மூலம் ஒவ்வொரு முறையும் தலா நூறுமெற்றிக் தொன்களாகக் கொண்டுவரப்பட உள்ளது. இவ்வாறு தரை இறக்கப்படும் உணவுப் பொருள்கள் அவ்விடத்தில் வைத்தே (4ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவனின் கண்ணிற்குள் ஷெல் துண்டு

நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் காசிப்பிள்ளையார் ஆலய பின்பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் அருகில் உள்ளவீடுகள் சேதத்திற்குள்ளாகின.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**இராசா டீசல் என்ஜினியர்ஸ்**

திங்கட்கிழமை 05-11-1990 முதல் பழைய இடமாகிய 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் மீண்டும் சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை அறியத் தருகின்றோம். (796)

**டில்கா வாச் வேக்ஸ்**
**DILKA WATCH WORKS**

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

**நாய்க் குட்டிகள்**

RHODESIAN RIDGE BACK 2 மாதக் குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தி, நல்லூர். (R-806)

**''இலவசம் நாவல்கள்''**

மீரா வெளியீடுகளாக வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள், 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (R-807)


# அரசமைக்க யாருடனும் கூட்டுச் சேருவதற்குத் தயார்

(டில்லி)

ஜனதாதள் கட்சியில் இருந்து பிரிந்து சென்றுள்ள குழுவின் தலைவரான சந்திரசேகரர் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு யாருடனும் கூட்டுச் சேரத்தயார் என அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முன்னாள் துணைப் பிரதமர் தேவிலாலின் இல்லத்தில் கலந்துரையாடியதன் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய சந்திரசேகரர் இதனைத் தெரிவித்தார்

ஆனால் கூட்டுச் சேரும் விடயத்தில் எந்தக் கட்சிகளுக்கும் முன் நிபந்தனை போடப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை இந்திரா காங்கிரஸ், சந்திரசேகரர் தலைமையில் அரசாங்கம் ஒன்று அமைப்பதற்கு தமது கட்சி முழு ஆதரவைத் தெரிவிக்கும் என்று இந்திரா காங்கிரஸ் அறிவித்துள்ளது. சந்திரசேகரரும் ராஜீவ் காந்தியும் நேற்றயதினம் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

கூட்டு அரசாங்கம் பற்றி கருத்து வெளியிட்ட பாரதீய ஜனதாக்கட்சி, புதிய அரசாங்கத்தினால் அரசியல் தேக்க நிலைக்கு தீர்வு கண்டு விட முடியாது என்றும் இடைக்காலத் தேர்தலை ஒரளவு ஒத்திப்போட உதவும் என்றும் தெரிவித்தது.

# வகுப்புவாதத்தை கண்காணிக்க உரிய அமைப்பு வேண்டும்

(டில்லி)

இந்தியாவில் பத்திரிகையாளர்களிடையே பரவி வரும் வகுப்பு வாதத்தை தூண்டிவிடும் செய்திகளைக் கண்காணிக்க உரிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என இந்திய பத்திரிகையாளர் அமைபபின் தலைவர் நிகில் சக்கரவர்த்தி பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அண்மைக் காலமாக நாட்டில் நிலவி வரும் வகுப்புவாத போக்குகள் குறித்து அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் அமைப்பின் கூட்டத்தில் நிகில் சக்கரவர்த்தி இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இருநூறுக்கும் அதிகமான பத்திரிகையாளர் பிரதிநிதிகளைக் கொண்ட இந்தக் கூட்டத்தில் பெருமளவு ஆதரவு கிடைத்தது.

வகுப்புவாத நிலைமைகளை குறிபபிடுவது மற்றும் அதன் விமர்சனங்களிலும் நிதானத்துடன் செயல்படுவது என்பது குறித்தும் ஆலோசனை நடத்தபபட்டது.

## விசேட கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் இன்று புதன் கிழமை காலை பத்து மணிக்கு விசேட கூட்டம் நடைபெற உள்ளது.

இக் கூட்டத்திற்கு யாழ். மாநகரசபை ஆணையாளர், மூன்று நகரசபைகளின் செயலாளர்கள், பிரதேச சபைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோரை முக்கிய விடயம் சம்பந்தமாகக் கலந்துரையாட இருப்பதால் தவறாது சமுகமளிக்கும்படி யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்கரம் டீவகலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## பயிலுனர் ஆசிரியர் விசேட கூட்டம்

(உரும்பராய்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பயிலுனர் ஆசிரியர்களுக்கான அவசர விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (11.11.90) காலை 9 மணிககு உரும்பராய் கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. சகல பயிலுனர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகக் குழுவினர் கேட்டுள்ளனர்.

## புங்குடுதீவில் பீரங்கித்தாக்குதல்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுக் கடற் பகுதியில் தரித்து நின்ற பாரிய பீரங்கிப் படகொன்று கடந்த நான்காம் திகதி பிற்பகல் ஐந்து மணியளவில் குறிகாட்டுவான். இறுப்பிட்டி ஆகிய பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டது. இத்தாக்குதல் 5 ஆம் திகதி அதிகாலை வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

இதனால் கரையோரப் பகுதி மக்கள் பீதியடைந்த நிலையில் பாதுகாப்புக் கருதி ஆலயங்களில் தஞ்சம் புகுந்திருந்து விட்டு தாக்குதல் ஓய்ந்த பின்னர் தமது வீடுகளுக்குத் திரும்பினர். (22)

ஐ.நா. சபையிடம் அமெரிக்கா கோரிக்கை

# படை பலத்தை பிரயோகிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுக

(றியாட்)

ஈராக்கிற்கு எதிராக இராணுவ படைபலத்தை பயன்படுக்த அனுமதிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுமாறு அமெரிக்கா ஐ நா பாதுகாப்பு சபையிடம் கேட்டுக் கொண்டிருக்கிறது என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் தெரிவித்துள்ளார்.

வளைகுடா நாடுகள் மற்றும் ஐரோப்பிய சமூக நாடுகளுக்கு விஜயம் செய்ய இருக்கும் ஜேம்ஸ் பேகர் இத்தகவலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

குவைத்தில் இருந்து ஈராக்கை வெளியேற்றுவதற்கான இராணுவ நடவடிக்கை பற்றிய கால அட்டவணையை ஜேம்ஸ் பேகரின் பயணம் முடிவு செய்யும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைனின் வேண்டுகோளின்படி ஜோர்டான் மன்னர் குசைன் பிரான்சிய ஜனாதிபதி மித்ரோனைச் சந்திக்கப் பாரிஸ் சென்றிருக்கிறார்.

## மரண தண்டனை

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமிற்கு அருகில் வைத்து உளவாளி ஒருவருக்கு நேற்று முன்தினம் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் பெயர் விபரங்கள், தங்கும் வீடுகளின் வரைபடங்கள்என்பவற்றுடன் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட குருமண் வெளியைச் சேர்ந்த கமலநாதன் (வயது 30) என்ற உளவாளிக்கே நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணியளவில் களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் இருந்து 200யார் தூரத்தில் வைத்து மரண தண்டனை வழங்கப்பட்டது. (மு)

## மாடு தாக்கியவர் படுகாயம்

(கைதடி)

நேற்றுமுன்தினம் காலை தனது எருதுமாட்டை வயலில் கட்டுவதற்காகக் கைதடியைச் சேர்ந்த ச வேலன் என்பவர் கொண்டு சென்றபோது அது வழியில் திடீரெனப் பாய்ந்து கொம்பால் அவரது நெஞ்சில் குத்தியது. ஆபத்தான நிலையில் இவர் உடனடியாக மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## ஓராண்டு அஞ்சலி



**செல்வி கலாரேகா கதிர்காமத்தம்பி**

மலர்வு: 14 – 05 – 1974 உதிர்வு: 20 – 10 – 1989

திதி நாள்: 08 - 11 - 1990

மகளே! உன் பிரிவு, மண்ணிலோ ராண்டை
நகர்த்தி, விரைவாய் நடந்தது கண்ணே!
மின்னி மறையும் வானத்து மின்னலாய்
மண்ணில் வந்து நீ மறைந்து சென்றாய்!
உன்னிற் கொண்ட உண்மைப் பாசம்,
இன்னும் எம்மை ஈர்த்து நிற்குதம்மா!
என்றும் மாறா ஏக்க நினைவுகள்
உன்னை நாளும் ஊன்றி உணர்த்துதம்மா!
என்றா லுமுன்னை எம்பெருங் கூத்தனின்
மன்றி லாடும் மாண்பால்
நின்று, மனந்தேறி நிற்கி றோமம்மா!

அப்பா, அம்மா,
சகோதரன்,
சகோதரிகள்.

'அன்னை இல்லம்'
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
08-11-90.

(R- 812)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**செல்வி வசந்தராசா சகிதா**
(கீதா)

அன்னை மடியில் 22—09—1989
ஆண்டவன் மடியில் 08—10—1990
உன் பிரிவால் துயரும்
அன்பு அப்பா, அம்மா, உற்றார், உறவினர்கள்

வற்றாப்பளை வீதி,
4 ஆம் வட்டாரம்
முள்ளியவளை.

தகவல்
பெரியமாமா குடும்பம்

(R-804)

## 2 ஆவது வருட நினைவு

செம்மனத் தியாகி,
உயர்திரு.
**ச. அ. செபரத்தினம் அவர்கள்**
(முன்னாள் அஞ்சலகப் பரிசோதகர்,
பண்டத்தரிப்பு பிரஜைகள் குழுத் தலைவர்)

தோற்றம்: 17 – 07 – 1928 மறைவு: 07 – 11 – 1988

நாமின்று இழந்து நிற்பது
அருமைக் குடும்பத் தலைவனை!
அயலவர் இழந்ததுவோ அருமைச் சிநேகிதனை!
இனசனத்தார் இழந்ததுவோ
தமக்கெல்லாம் இனியவரை!
கிராமத்தார் இழந்ததுவோ
இழக்கவொண்ணாத் தலைவரை!
இத்தனையும் இழக்கவைத்த
சன்னங்களில் ஒன்று சலனமற்றிருக்கிறது!
இழந்தவர் நாமாயின் வென்றவர் யாரோ?
புரியாத புதிரோ? ஒன்றுமட்டும் புதிரல்ல
அவனின்றி அணுவும் அசையாது - அவனது
ஆட்சியின் கோலங்களைக் காலங்கள் புரியவைக்கும்.

உம்மை நினைந்துருகும்
அருமை மனைவி தவமணி
புத்திரி ஆனந்தி,
புத்திரர் குமார், சின்னோய், சத்தி,
அமுதன்:
பண்டத்தரிப்பு: உற்றார், உறவினர், நண்பர்கள்.
(R-811)

## சிந்தனைக்கு

கண் இரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கை கொட்டிச் சிரியாரோ?

— பாரதியார்


ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 07-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# சரண்சிங் வழியில் சந்திரசேகர்

இந்தியாவில் இன்று நடக்கவிருக்கும் விசேட ஒரு நாள் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசாங்கம் வீழ்ச்சி அடையும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை என நம்பலாம். ஏற்கனவே சிறுபான்மை அரசாங்கமான தேசிய முன்னணி அரசாங்கம் இரண்டாகப் பிளவுபட்டதன் மூலம் அதன் வீழ்ச்சி உறுதி செய்யப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம்.

இன்று இந்திய அரசியலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் 1979ஆம் ஆண்டை நினைவுபடுத்துகின்றன. அப்பொழுதும் இந்திய அரசியலில் இதை ஒத்த நிலையே காணப்பட்டது. 1977 ஆம் ஆண்டு இந்திரா காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்து பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்த ஜனதாக் கட்சியும் இரண்டாண்டுகளின் பின் பிளவுபட்டு இதேபோன்றதொரு குழப்ப நிலையிலேயே இருந்தது ஆனால் அன்றைய நபர்கள் வேறு. இன்றைய நபர்கள் வேறு. ஆனால் இரண்டு பகுதியினரின் நடத்தைகளும் ஒன்றாகவே உள்ளன.

அன்று ஜனதாக் கட்சியை உட்கட்சிப் பூசல் பிரித்தது. ஜனதாக் கட்சி பிரிவதற்கு அன்று சரண்சிங் காரணமாக இருந்தார். அவருக்கு அதிகார ஆசையை ஊட்டி மறைமுக ஊக்கமும், உற்சாகமும் கொடுத்தவர் மறைந்த இந்தியப் பிரதமரான இந்திராகாந்தியாவார். அதாவது ஜனதாக் கட்சியை உடைத்து ஆட்சியைக் கைப்பற்ற சரண்சிங்கிற்கு ஆசை ஊட்டிய இந்திராகாந்தி பின்னர் தமது தேவைக்கேற்ப சரண்சிங்கின் காலை வாரிவிட்டார்.

இதை ஒத்த நடவடிக்கையையே இன்று தாயைப் பின்பற்றி இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ்காந்தியும் மேற்கொண்டுள்ளார். இன்று ஜனதா தளத்திற்குள் அதிருப்தியாளர்களான சந்திரசேகரையும், தேவிலாலையும் ராஜீவ் பயன்படுத்திக்கொண்டார். முன்னரைப்போலவே இன்று பலவீனமான உடைந்த நிலையில் உள்ள ஜனதா தளத்தினர் ராஜீவ்காந்திக்கு ஒரு பலமான எதிரிகளல்ல.

ஆனால் அன்றைய நிலைக்கும், இன்றைய நிலைக்கும் ஒரு வித்தியாசம் இருக்கின்றது. அன்று ஜனதாக் கட்சி பிளவுபட்டு ஆட்சி கவிழ்ந்தபோதும் இந்திரா காங்கிரஸ் ஆட்சியைக்கைப்பற்றபலமில்லாதுஇருந்தது. ஆனால் இன்று ஜனதாதளம் உடைவுற்றநிலையில் ஆட்சியைப் பொறுப்பேற்கும் நிலையில் இந்திரா காங்கிரஸ் உள்ளது. ஆனால் ஆட்சியைப் பொறுப்பேற்க இந்திரா காங்கிரஸ் தயாராக இல்லை. இதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று தேர்தல் மூலம் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைப் பிடிக்க இந்திரா காங்கிரஸ் எண்ணுகிறது. மற்றையது இன்றைய நெருக்கடி நிலையில் ஆட்சியைப் பொறுப்பேற்று கெட்ட பெயரைச் சம்பாதிக்காது யாருடைய தலையிலாவது கட்டி கெட்ட பெயரை அவர்களுக்குச்சுமத்துவது; அதாவது இந்திரா காங்கிரஸின் நலம் பேணுதல் என்ற ரீதியில் ராஜீவின் நலன் பேணுவதைக் கட்சி நோக்கமாகக் கொண்டுள்ளதே ஒழிய இந்திய மக்கள் நலன்கள் பற்றி, நாட்டின் நலன்பற்றி அவர்கள் சிந்திக்கத் தயாராக இல்லை.

இந்தியாவில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், நேரு குடும்பத் தலைமைக்கும் எதிராக மக்கள் ஒரு கட்சியையும், தலைமையையும் தெரிவு செய்ய முற்பட்டு தோல்விகண்ட இரண்டாவது சம்பவம் இதுவாகும். அதாவது தாம் தெரிவு செய்த மாற்றுக் கட்சியினராலும், தலைமைகளினாலும் மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள். அதாவது, இந்தியாவில் தேசிய நலன்களைவிட தமது அதிகாரம், பதவிஎன்பன வற்றை மட்டும் இலக்காகக் கொண்ட இந்த அரசியல் வாதிகள் இருக்கும்வரை இந்தியாவில் அமைதியின்மையும் கலவரமும் வன்முறையும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

1979ஆம்ஆண்டு மொரார்ஜி தேசாயின் அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சிக்கு வந்த சரண்சிங் பிரதமர் பதவி ஏற்றதும் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் 'ஒரு நாளேனும் இந்தியாவின் பிரதமராக இருக்கவேண்டும் என்ற எனது நெடு நாளைய ஆசை நிறைவேறியது' எனத் தெரிவித்தார்.

இதைப் போன்றே ஜனதாதளக் கட்சியை உடைத்த சந்திரசேகர் 'அரசாங்கத்தை அமைப்பதற்கு எந்தக் கட்சியுடனும் நிபந்தனையின்றிக் கூட்டுச்சேரத்தயார் என பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்துள்ளார். அதாவது கொள்கை வேறுபாட்டை ஒதுக்கித் தள்ளிவிட்டு (அதுவும் சரிதான், இவரிடம் கொள்கை எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை) ஆட்சியில் அமர்வதற்காக கூட்டுச்சேரத் தயார் என்பதே அதன் பொருளாகும். அதாவது சரண்சிங்கின் ஆசையை ஒத்த ஆசையே இவரது ஆசையுமாகும்.

இவ்வாறாகப் பதவிமோகம் கொண்ட தலைவர்களைக் குறைந்தது தேர்தல் மூலமாவது இந்திய மக்கள் கண்டறியாவிட்டால் இந்தியாவில் ஜனநாயகம் என்பது அதிகார மோகம் கொண்ட கோமாளிகளின் கூடாரமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



பொதுவாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் போவதானால் எத்தனை மைல் நடக்க வேண்டும் என்று சொல்லமாட்டார்கள். எத்தனை மணித்தியாலம் நடக்க வேண்டும் என்றே கூறுவார்கள். எட்டு மணித்தியால நடை, பத்து மணித்தியால நடை என்பார்கள். இந்தப் பிரயாண ஆரம்பத்தில் ''இந்தப் பிரயாணம் தான் கொஞ்சம் கஷ்டம். பிற்பகல் 2. 30க்குப் புறப்பட்டால் அதிகாலை 4. 00 மணிக்கு எங்களுடைய நடையில்(திருமலை மாவட்டப் போராளிகளின்) போய்ச்சேரலாம். உங்களுடைய நடைக்கு அதிகாலை 5. 30 மணி செல்லும் என நினைக்கின்றேன் என்றார் பதுமன். இடையில் எங்குமே தங்கமுடியாது. இந்தப் பயணத்தின்பின் நீங்கள் பொதுமக்களைச் சந்திக்கக் கூடியதாக இருக்கும் என்றார். 14- 9- 90 அன்று திருமலையில் கால் வைத்த நாம் 23- 9- 90 அன்றுதான் பொதுமக்களைக் கண்ணால் காணப்போகின்றோம். (ஏற்கனவே நான் குறிப்பிட்ட வாழைத்தண்டில் இருந்த காய்களை மக்கள் விழுந்தடித்துப் பொறுக்கி முண்டி விழுங்கிய சம்பவம் 25 - 9 - 90 பிரயாணத்தின் போது நடந்தது )

இதுவரை நாம் சந்தித்த முகாம்களில் இருந்தவர்கள் பொதுமக்களைக் காணமுடியாது: அவர்களுடைய உலகம் இந்தக் காடுகளும், போராளிகளும்தான். நான் ஒருநாள் ஒரு போராளியைச் சந்தித்து இதுபற்றி உரையாடியபோது, தற்போதைய போரைவிட ஒரு நெருக்கடியான நிலை இந்திய இராணுவத்துடனான போரில் இருந்தது என்று குறிப்பிட்டார். தனக்கு இரு மருமக்கள் இருக்கின்றார்கள் என்றும், அவர்களின் நினைவு தன்னை அடிக்கடி வாட்டும் என்றும் குறிப்பிட்டார். தான் அப்போது குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் இருந்த பகுதியை அண்டிய காடுகளில் இருந்ததால் காலையில் எட்டு மணியளவில் உயரமான மரங்களில் ஏறி நின்று பாலர் பாடசாலைக்குச் செல்லும் சிறு குழந்தைகளைக் கண்டு ஆனந்திப்பதாகக் குறிப்பிட்டார். அந்தக் குழந்தைகளைக் காணும் போது தனது மருமக்களைப் பார்க்கும் உணர்வு ஏற்படுவதாகவும் கூறினார். ''மென்மையான மனது கொண்டவர்களே போராளிகளாகின்றார்கள்: அவர்களால்தான் தமது இனத்திற்கெதிரான அடக்குமுறைகளைச் சகித்துக்கொள்ள முடிவதில்லை. அதைச் சகித்துக்கொள்ளும் மனம் உடையவர்களே போராட்டத்துக்கு வெளியில் இருப்பவர்கள்'' என்று ஒருமுறை போராளி சீலன் (சார்ள்ஸ் அன்ரனி)கூறியது நினைவுக்கு வந்தது.

எமது பயணத்தில் இன்னோர் அம்சம் ஓர் இடத்திலிருந்து எம்மை அழைத்துச் செல்லும் போராளிகள் நாம் சென்று அடையப்போகும் முகாமைச் சேர்ந்தவர்களை இடையில் சந்தித்து எம்மை அவர்களிடம் ஒப்படைப்பார்கள். திரு. பதுமனும் அவரது மெய்ப்பாதுகாவலர் சிலரும் மட்டுமே எம்முடன் திருமலை மாவட்ட எல்லைவரை வருவார்கள். ஏனெனில் ஒவ்வொரு முகாமைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் அந்தப் பகுதிக் காடுகளைப் பற்றித் தெரியும். இடையில் இராணுவத்துடன் மோதல் ஏற்பட்டாலும் அவர்களால் மட்டுமே சரியான பாதையில் எம்மைக் கொண்டு போய்ச்சேர்க்க முடியும்.

இன்றைய பிரயாணம் எட்டு இராணுவ முகாம்களைக் கடக்க வேண்டிய பிரயாணம் என்பதைத் தெரிந்துகொண்டோம். ஒரு முகாமைப் பகலில் கடந்துவிட்டோம். இந்தப் பிரயாணத்தில் யாராவது கதைக்கவோ, இருமவோ முடியாது. முகாம்களுக்கு மிக அருகிலேயே எமது பிரயாணம் தொடர்வதால் சப்பாத்து ஒலியைத் தவிர வேறெதுவும் கேட்கவில்லை. ஏற்கனவே

**6**

செய்த ஏற்பாட்டின்படி எம்மைப் பொறுப்பெடுக்கப் போகும் குழுவும் தனது பிரயாணத்தைத் தொடங்கியிருந்தது. பயணத்தின் இடையில் இராணுவ முகாம்களில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிச் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது இரவானதும் முகாம்களின் வெளிச்சம் பிரகாசமாய்த் தெரிந்தது: மிக அருகருகே இருந்த இந்த இராணுவ முகாம் ஏழும் ஒரே இரவில் கடக்க வேண்டியவை இந்த ஏழு முகாமில் யும், முதுகில் தொங்கும் சுமையான பைகளையும் சுமந்துகொண்டு போராளிகள் படும்பாடு பெரும்பாடுதான். பொத்துப்பொத்தென்று விழுவார்கள் உடல் முழுவதும் சேறு பிரளும். சேற்றை எண்ணிச்சப்பாத்தைக் கழற்றினால் பின்பு வரும் வயல்களில்உள்ளதொட்டால்சுருங்கி கால்களை விறாண்டும். திருப்பி சப்பாத்தைப் போடமுடியாது. அடுத்த சில நிமிடங்களில் சேறைச் சந்திக்க வேண்டியிருக்கும். வழிகாட்டியாக இருப்பவர் ஒவ்வொரு இடத்திலும் நின்று இங்கே முள்ளுக்கம்பி உண்டு, இங்கே பள்ளம் உண்டு என்று இரகசியமாகக் கூறுவார். முதுகில் சுமை, நடைக் கஷ்டம். நடக்கும்போதே இப்போராளிகள் தூங்குவதும் உண்டு. தூக்க நடை நடப்பவர்கள் வயல் வரம்புகளில் இடறி விழுவார்கள். வரிசையாகச் செல்லும் போது சிலர் நின்ற நிலையிலேயே தூங்குவார்கள். பின்னால் வருபவர் முதுகில்தட்டி முன்னே போ என்று சமிக்ஞை செய்யவேண்டும். இந்தப் பகுதியில் நடக்கும்போது (எமக்கு அடுத்த பயணத்தில்) ஒருவர் தூக்கத்தில் ஒரு கிணற்றில் விழுந்து விட்டார். ஒருவாறு எட்டு முகாம்களையும் கடந்து விட்டோம். ஆனால் போக வேண்டிய இடம் இன்னும் உண்டு. அதிகாலை 3.15மணியளவில் சோர்ந்து படுத்து விட்டோம். அப்பாடா என்ன சுகம்! இப்போதும் சிலர் காவலில் நின்றார்கள்.

மீண்டும் காலை 6.45க்கு பயணம் தொடங்கியது. இந்தப் பயணம் காலை 10,30 வரை நீடித்தது. இரவு மாத்தயா அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவந்த முட்டைமாவில் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து உள்ளங்கையில் கொட்டிச் சாப்பிட்டதைத்தவிர வேறுசாப்பாடே இல்லை. இனிக்கதைக்கலாம் என்றார் பதுமன். 'என்ன பதுமன் இவ்வளவு கஷ்டமா?' என்று கேட்டோம். 'உங்களுக்காகத்தான் இந்தப் பாதை. இல்லாவிட்டால் கழுத்தளவு தண்ணீர், சேறு, கன்னாக் காடுகளுக்குள்ளால் தான் போகவேண்டும்!' என்றார்.

> காலையில் எட்டுமணியளவில் உயரமான மரங்களில் ஏறிநின்று பாலர் பாடசாலைக்குச் செல்லும் சிறுகுழந்தைகளைக் கண்டு நான் சந்தோஷப்படுவேன் அந்தக் குழந்தைகளைப் பார்க்குமபோது எனது மருமக்களைப் பார்க்கும் உணர்வு எனக்கு ஏற்படும்.
>
> — ஒரு போராளி

எந்த முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் எமது பாதையில் படுத்திருந்து தாக்கினாலும் சண்டை செய்வதைத் தவிர வேறு வழியேயில்லை. ஏனெனில் இப்பகுதியில் காடுகள் இல்லை. முழுவதும் வயல்கள். இரவு வந்ததும் ஒருவாறு நான்கு முகாம்களைக் கடந்து விட்டோம். ஐந்தாவது முகாமை நோக்கி நேராக நடக்க வேண்டும். முகாமுக்கு நூறு யார் தூரத்திலேயே எமது பாதை மாற்றப்பட்டது. அந்த இடத்தில் எம்மைப் பொறுப்பேற்க அடுத்த குழு தயாராக இருந்தது.

புதிய குழுவுடன் இணைந்து பிரயாணத்தைத் தொடர்ந்தோம். ஆறாவது முகாமை அண்மித்ததும் அங்கிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. பயத்தினால் இரவில் அவ்வாறு இடையிடையே சுடுவார்கள் என்பதைத் தெரிந்து கொண்டோம். இதன் பின் தான் சிரமம் தெரிந்தது. முழுக்க சேறுகள் நிறைந்த பாதை. அப்போதுதான் நாம் ஒரு பொதுமகனைக் கண்டு கொண்டோம். அப்பாடா!

இப் பொதுமகன் எமக்கு வழிகாட்ட வந்தவர், இப்பகுதியை அங்குலம் அங்குலமாகத் தெரிந்துகொண்டவர். பெரும்பகுதி முழங்கால் அளவு சேறு, துப்பாக்கிகளை

வழிவழியே ஆற்றங்கரைகள், காடுகளில் மக்கள் கூட்டம்கூட்டமாக இருப்பதைக் கண்டோம். இவர்கள் அகதி முகாமுக்கு போகவில்லையா? என்று வழிகாட்டியாக வந்த அந்தப் பொதுமகனைக் கேட்டோம். 'நான்கூட ஒருநாள் அகதிமுகாமில் இருந்தனான். ஆனால் முஸ்லிம் ஊர்காவல் படையினரின் தொல்லை பொறுக்கமுடியவில்லை. அதுதான் ஓடிவந்துவிட்டேன். என்னைப்போல் வெளியேறியவர்கள்தான் இவர்கள்!' என்றார். 'அகதி முகாம்களில் என்னதான் நடக்கிறது?' என்று கேட்டேன். 'எதையென்று சொல்ல...' என்றவாறே தொடர்ந்தார்.

(தொடரும்)

நாம் மரபுப் படையோ, கரந்தடிப் படையோ அல்ல

# போராட்டத்தின் மூலம் யுக்திபடைத்து பரிணாமம் பெற்ற மக்கள் படை

– யோகி

(முல்லைத்தீவு)

நாம் மரபுவழிப் படையுமல்ல, மறைந்து நின்று தாக்கி மறையும் கரந்தடிப் படையுமல்ல. நீண்ட காலப் போராட்டத்தில் அதி உத்வேகம் பெற்று பலயுத்திபடைத்து பரிணாமம் பெற்ற மக்கள் படை எமது படை என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரட்ணம் யோகி கூறினார்.

கடந்த சனிக்கிழமை ஒட்டுசுட்டானில் மாவீரர் தினம் நடத்துவது குறித்து முல்லைத்தீவு மாவட்டச் சிற்றூர் அவை, வட்டவை கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய யோகி இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் நாம் இந்தக் குறுகிய காலத்தில் 400க்கும் அதிகமான போராளிகளை இழந்துள்ளோம். ஆனால் சிறிலங்கா இராணுவமோ 18 வருடங்களில் சந்தித்திராத பெரும் இழப்புக்களை இப்போது சந்தித்திருக்கிறது.

1982 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி முதல் களப்பலியான சங்கர் (சத்தியநாதன்) தொடங்கி இன்று வரை 2000 போராளிகளை நாம் இழந்துள்ளோம்.

எமது தமிழீழம் தனிநாடு. எனவே எமக்கென ஒரு தேசியக் கொடி, தேசிய நாள், தேச விடுதலைப் பாடல் வேண்டும். விடுதலைப் புலிகளின் முதல் களப்பலியாகிய தேசிய வீரனின் நாளை தேசிய நாளாக நாம் கொண்டாடுகிறோம்.

இந்தத் தேசிய நாள் ஒரு களியாட்ட நாளுமல்ல, தனிச் சோகம் நிறைந்த நாளுமல்ல. நாம் எடுத்துக் கொண்ட இலட்சியப் பாதையிலே நசுக்குண்டவர்கள், கல்லறையாகியவர்கள், சரித்திரமாகினவர்கள் வரலாறுகளை வரும் தலைமுறைகளுக்கு உணர வைப்போம், நினைவு கூருவோம். மேலும் அதி உன்னத தலைமையில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உறுதி பூணுவோம் என்று யோகி குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மனோ தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கலை, கலாசாரப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, கலை கலாசார செயலாளர் தேவர், தமிழீழ விடுதலைப் புலிகள் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சீலன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## ஊர்காவற்றுறைப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை குறிகட்டுவானிலிருந்து அனலைதீவை நோக்கிச் சென்ற வள்ளம் ஒன்றை நோக்கிக் கடற்படையினர் துப்பாக்கிகளினால் சுட்டனர். தற்போது தீவுப் பகுதிகளில் கடற்படைப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளன. (15)

## கருத்தரங்குகளில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தைச் சேர்ந்த சகல ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், மருதனாமடம் இராமநாதன் கல்லூரி, வேலணை சேர். வைத்திலிங்கம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய மூன்று நிலையங்களில் ஆண்டு 1, 2. 3 ஆசிரியர்களுக்கு பன்னிரெண்டாம் திகதி திங்கட்கிழமையும், ஆண்டு 4, 5 ஆசிரியர்களுக்கு செவ்வாய்க்கிழமையும் கருத்தரங்குகள் நடைபெறும்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகிய நிலையங்களில் ஆண்டு 1. 2. 3 ஆசிரியர்களுக்கு பதினைந்தாம் திகதி வியாழக்கிழமையும் ஆண்டு 4, 5 ஆசிரியர்களுக்கு வெள்ளிக்கிழமையும் கருத்தரங்குகள் நடைபெறும். பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் ஆண்டு 1, 2, 3 ஆசிரியர்களுக்கு பத்தொன்பதாம் திகதி திங்கட்கிழமையும் ஆண்டு 4, 5 ஆசிரியர்களுக்கு செவ்வாய்க்கிழமையும் கருத்தரங்குகள் நடைபெறும்.

சகல ஆசிரியர்களும் வசதி போல் தாம் விரும்பிய நிலையங்களில் நடைபெறும் கருத்தரங்குகளில் பங்குபற்றலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## டிசம்பர் 22

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

21:1-91 தொடக்கம் நடாத்தப்படும். இப் பரீட்சைகள் கோட்டக்கல்வி உதவிப்பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் கொத்தணி அதிபரின் மேற்பார்வையில் அந்தந்தப் பாடசாலைகளினால் நடாத்தப்பட வேண்டும்.

வகுப்பேற்றப் பரீட்சைக்கு தோற்றாத மாணவர்களை எக்காரணம் கொண்டும் வகுப்பேற்றம் செய்தலாகாது. இந்த ஆண்டிற்கான வகுப்பேற்றப் பரீட்சைகள் முடிவுற்றதும் 1991ஆம் ஆண்டு முதலாம் தவணைக்கான வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இச் சுற்று நிருபத்தில் வழங்கப்பட்ட பணிப்புரைகள் யாவும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

## அரச பதவி வெற்றிடங்கள் நிரப்பப் போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

அரசாங்கத் துறைகளுக்கான பதவி வெற்றிடங்கள் போட்டிப் பரீட்சை மூலமே நிரப்பப்படவுள்ளன என்று கொள்கை திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

ஆனால் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு தனியான பரீட்சை நடத்தப்படும் என்றும் இன விகிதாசார அடிப்படை பேணப்படும் என்றும் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் பணிப்பாளர் ராமானுஜம் தெரிவித்தார்.

74 வீதம் சிங்களவர்களுக்கும், 12.6 தமிழர்களுக்கும் 7 வீதம் முஸ்லிம்களுக்கும், 5 வீதம் இந்தியத் தமிழர்களுக்கும் என்ற அடிப்படையில் இந்த வேலை வாய்ப்புகள் அமையுமாம்.

போட்டிப் பரீட்சை மூலம் அரசாங்க நியமனம் என்ற வகையில் முதற் கட்டமாக இலங்கை வங்கிகளுக்கான வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன. இதற்கான போட்டிப் பரீட்சைகள் அண்மையில் நடத்தப்பட்டனவாம்.

## மல்லாகத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யே. நவீனராஜன் (14) யே. சஞ்சயன், ம. சாந்தநாயகி(17) இ. பாலச்சந்திரன் (26) இ. சிவராசா (32) இ. துரைசிங்கம் (31) திருமதி ச. கோபாலசுந்தரம் ஆகியோர் காயமடைந்தனர்.

சி. புஸ்பவதி என்பவர் தனது ஒரு காலையும், ஒரு கையையும் இழந்துள்ளார். இவர்கள் மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிவப்பிரகாசம் கந்தசாமி என்போரின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

## வீதி அபிவிருத்தி ஊழியர்கள் கடமைக்கு வரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் வேலை செய்யும் சகல ஊழியர்களும் தத்தமது காரியாலயங்களுக்கு உடனடியாக சமூகம் தரும்படி பிரதான பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## நுண்கலை வகுப்புகள் நடைபெறுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக வகுப்புகள் மருதனாமட வளாகத்தில் நடைபெறுகின்றன என்பதை நுண்கலைத் துறைத் தலைவர் கா சிவத்தம்பி அறியத்தந்துள்ளார்.

## குருநகர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லொறிகளில் ஏற்றப்பட்டு கோண்டாவில் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படும் என உணவுக் கட்டுப்பாட்டதிகாரி தெரிவித்துள்ளார். (லோ)

## சிறுவனின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் ஷெல்லின் துண்டுகள் பல பாகங்களிலும் சிதறிய வேளையில் தெல்லி. துர்க்கா ஆலய அகதி முகாமில் தங்கியுள்ள ஒன்பது வயதுச் சிறுவனாகிய நா. யோகன் என்பவரின் ஒருகண்ணில் பாய்ந்து காயமுற்றமையினால் சிகிச்சைக்காக மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (83)

## மின் விளக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லைகளில் மின்னி மின்னி எரியும் வகையில் மின் விளக்குகள் பொருத்தஉள்ளோம். இது எத்தனை நாட்களுக்கு நிலைத்து அவ்விடத்திலேயே இருக்கும் என்பது குறித்தே அவர் கவலை தெரிவித்தார்.

## இராணுவத்தாலே

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட் சேதமும், நாட் சுணக்கமும் ஏற்படுவதுடன், ஏற்றுக் கூலி இறக்குக் கூலி, லொறி தாமதக்கூலி எனப் பலவிதமான நஷ்டம் எமக்கு ஏற்படுகின்றது.

கொழும்பிலிருந்து இப் பொருள்களை கிளிநொச்சிக்குக் கொண்டுவரும் வழியில் இவ்வாறு எந்தவிதமான தலையீடும் விடுதலைப்புலிகளிடம் இருந்து ஏற்படுவதில்லை எனவும் அக்கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. (39)

## யாழ். போதனா வைத்தியசாலை செஞ்சிலுவை பொறுப்பேற்றது

நேற்றுடன் யாழ் போதனா வைத்தியசாலையைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றது. இச் செய்தியை நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஜோர்ஜ் உள்ளூர்ப் பத்திரிகையாளருக்குச் சம்பிரதாயபூர்வமாகத் தெரிவித்து விளக்கம் அளித்தார்.

உள்ளூர் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோரும் பிரதிநிதி ஜோர்ஜ் உடன்சமுகமளித்திருந்தனர்.

செஞ்சிலுவை போன்ற சிலுவை அமைப்புடைய புவியியல் வரைபடப்பகுதி ''வைத்தியசாலைப் பிரதேசமாக'' யாழ். போதனா வைத்தியசாலையை மையமாகக் கொண்ட ஒரு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## சந்திரசேகர்----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றக் குழுவும் அங்கீகரித்துள்ளது இந்திரா காங்கிரஸ் முக்கியஸ்தர்களில் ஒருவரான நரசிம்மராவும், சந்திரசேகர் அணியைச் சேர்ந்த குஜராத் முதலமைச்சர் பட்டேலும் உறவு பற்றிய கொள்கை அறிக்கையைத் தயாரிப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனதா தளச் செயலாளர் ஜெய்பால் ரெட்டி ஜனதா தளத்திலிருந்து இன்னும் பலர் வெளியேற்றப்படலாம் என்றார். ஜனதா தளத்திலிருந்து 25 பேர் விலகியது என்று வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமாகச் செய்யப்படும் அறிவிப்புகள் 1/3 பகுதியினர் ஜனதா தளத்திலிருந்து வெளியேறவில்லை என்பதை உறுதிப்படுத்தவே கூறப்படுகிறது என்று சந்திரசேகர் அணி தெரிவித்துள்ளது. உண்மையில் 1/3 பகுதியினருக்கு மேல் வெளியேறியுள்ளார்கள் என்று அவ்வணி தெரிவித்துள்ளது.

ஜனதா தளத்திலிருந்து வெளியேறிய சந்திரசேகர் குழு தம்மைத் தனியான குழுவாக அங்கீகரிக்கும்படி மக்கள் அவைத் தலைவரைக் கேட்டுள்ளது. ஆனால் இவர் 25 பேரும் விலக்கப்பட்டுள்ளதாக மக்கள் அவைத் தலைவர் ராய் அனுப்பிய கடிதம் அதிருப்தியாளர்களுக்கு வந்து சேர்ந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. 25 பேரும் ஜனதாத் தளக் கட்சியுடன் தொடர்பில்லாதவர்கள் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிருப்தியாளர் அணியைச் சேர்ந்த குஜராத் முதலமைச்சரும் ஜனதா தளத்திலிருந்து விலக்கப்படலாம்.

மாக்ஸிஸ்ட் கட்சிகள் நான்கும் வி. பீ. சிங் அரசாங்கத்துக்கு நேற்று மீளவும் தமது ஆதரவை வலியுறுத்தியுள்ளன.

ஜனதா தளத் தலைவர்கள் எஸ். ஆர். தலைமையிலான குழு ஒன்று நேற்றுக் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனைச் சந்தித்து புதிய அரசியல் திருப்பங்கள் பற்றி எடுத்துரைத்தது. அதிருப்தியாளர் அணியைச் சேர்ந்த சந்திரசேகரும் குடியரசுத் தலைவருடன் அரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

### விசேட பாராளுமன்றக் கூட்டத் தொடர்

இந்தியாவின் தேசிய முன்னணி அரசின் பிரதமர் வி. பி. சிங் தனது பெரும்பான்மையை நிருபிப்பதற்கு வசதியாக இன்று முற்பகல் 11 மணியளவில் நாடாளுமன்ற மக்கள் அவை விசேட கூட்டத்தொடர் தொடங்குகிறது.

பிரதமர் வி. பி. சிங் மீதான நம்பிக்கைப்பிரேரணை 7மணி நேரம் விவாதித்து முடிவெடுக்கப்படும். இன்று நடைபெறவிருக்கும் மக்கள் அவையின் ஒருநாள் கூட்டத்தொடரில் அகாலிதள் நடுநிலைமை வகிக்கும் என இக்கட்சி டில்லியில் அறிவித்துள்ளது. அகாலிதள் கட்சியில் மொத்தம் 7 எம்.பிகள் இருக்கிறார்கள்.

## மரண அறிவித்தல்



### திருமதி நாகபூஷணி கிருஷ்ணர்

வட்டு கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகபூஷணி கிருஷ்ணர் 06 - 11 - 1990 அன்று சிவபதமெய்தினார். இவர் புங்குடுதீவில் நீண்டகாலமாகக் கட்டட ஒப்பந்ததாரராக இருந்த திரு கிருஷ்ணர் அவர்களின் அன்பு மனைவியும், ஐயாத்துரை (கட்டட ஒப்பந்ததாரர்), நடராசா (சையிக்கிள் பெயின்ரர்), சதாசிவம் (சுங்கத் திணைக்களம்), சேனாதிராசா (கட்டடஒப்பந்ததாரர்), சண்முகலிங்கம் (கட்டட ஒப்பந்ததாரர்), அருந்தவச் செல்வி, சிவனேசச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகரத்தினம், மீனாட்சி அம்மா, நிர்மலேஸ்வரி, பத்மாவதி, கமலநாயகி, கணேசராசா (பிரான்ஸ்), தவராசா (கட்டட ஒப்பந்ததாரர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றசம்புகேஸ்வரி, மகாலட்சுமி, நீலாம்பிகை, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், யோகம்மா, பாக்கியலட்சுமி, தனலட்சுமி, இராமநாதன் (கட்டார்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வட்டுக்கிழக்கு ''நாகபூஷணி'' இல்லத்தில் இன்று (7-11-90) புதன்கிழமை நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை கொத்தத்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

வட்டுக்கிழக்கு,
சித்தன்கேணி. (R/814)

தகவல்:
கி.சண்முகலிங்கம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.